7th March 1961]

SRI V. SUBBIAH : இப்பொழுது முக்கியமான இனங்கள் பஞ்சாயத்துக்கு வருவதால் இந்த நிலவரி தாசில்தார் இருக்க வேண்டியது அவசியமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது நிறைய வேலை இருக்கிறது. போகப்போக அவசியமா என்பதை அப்போது பார்க்கலாம்.

SRI C. MUTHIAH : ஒவ்வொரு தாசில்தாரும் ஒரு ஆண்டு காலம் கமிஷனராக இருக்கவேண்டுமென்று சென்றவாரம் சர்க்கார் உத்திரவு போட்டிருக்கிறது. பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசரை பஞ்சாயத்து யூனியனிலே கமிஷனராகப் போடுவதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது பிளாக் டெவெலப்மென்ட் ஆபீசர்தான் கமிஷனராக வேலை செய்கிறார்.

SRI A. GOVINDASAMY : புதிதாக வரும் பஞ்சாயத்து யூனியனிலே கமிஷனராக, தாசில்தாராகவும், டெபுடி தாசில்தாராகவும் உள்ளவர்கள் நியமிக்கப்படுவதற்கு வசதி இருக்கிறது. இதர இலாக்காவில் இருப்பவர்களையும் நியமிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்கிறபடி வசதி இருப்பதாகத் தெரியவில்லை.

Fodder

* 632 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திற்கான தீவன-மேய்ச்சல் வசதிக் கமிட்டி அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டதா ?

(இ) இம்மாநிலத்தில் கால்நடைகளின் தீவன-மேய்ச்சல் வசதியைப் பெருக்க அரசாங்கம் என்ன திட்டமிட்டிருக்கிறது ?

(உ) புதிதாய் ஆரம்பிக்கப்பட்டு வரும் கோசாலைகளுக்கு மேய்ச்சல் வசதிக்காக ஏதேனும் வகை செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The following are the schemes formulated by this Government for the development of fodder and grazing facilities for cattle :—

(1) Creation of fodder banks and improvement to grazing over about 12,500 acres in the Reserved Forests;

(2) Development of fodder and pasture over about 15,000 acres in the Reserved Forests;

(3) Scheme for granting subsidy to State Farms for intensive development of pastures;

(4) Establishment of pasture demonstration plots;

[7th March 1961

(5) Scheme for granting subsidy to the State Farms for supply of seeds, roots, etc., of fodder grasses;

(6) Subsidy for chaff cutters;

(7) Construction of silo pits;

(8) Award of prizes to persons maintaining best pastures;

(9) Scheme for raising of fodder and grass in the Agricultural Farms and on ryots' holdings; and

(10) The Systematic Botanist and Associate Professor of Botany is engaged in doing research on the problem of improving fodders and pastures with the assistance of a Fodder Research Officer under the Indian Council of Agricultural Research Scheme.

(*c*) No special arrangements have been made for providing grazing facilities for the newly started Goshalas.

Sri A. VEDARATHNAM : ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் மேய்ச்சல் தரிசு நிலங்களை நாளடைவில் மனிதர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு பட்டா செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசாங்கம் தடை செய்ய முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இனித் தடைசெய்வதற்கு மேய்ச்சல் நிலங்களில் ஆக்கிரமிப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஆக்கிரமித்திருந்தாலும் உடனடியாக சர்வே செய்து பரிசீலனை செய்வதற்கில்லை. மேய்ச்சல் வசதிகளை அதிகரிக்கவேண்டுமென்று அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

Sri A. VEDARATHNAM : இந்த மேய்ச்சலுக்கு வசதி செய்யும் கமிட்டி அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டதாக கூறினார்களே அந்தக் கமிட்டியில் இருக்கும் உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறிவிக்க முடியுமா ? அவர்களின் பணிகள் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி பெரிய லிஸ்ட் இருக்கிறது. தனியாகக் கேள்வி போட்டால் யார் யார் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு முடியும்.

The functions of the Committee are as follows :—

(1) To watch the progress of the Feed and Fodder Development Schemes;

(2) To consider various measures that may be adopted for fuller utilisation of the available fodder and feed resources, forest grazing and their improvement;

(3) To suggest measures that may be taken to increase feed and fodder resources through better land utilisation use of better varieties of crops, fertilisers, irrigation facilities, etc.;

(4) To suggest methods for the conservation of grasses available in the interior forest areas and their utilisation during deficit periods;

(5) To consider the question of village grazing areas, their improvement and control;

7th March 1961]

(6) To consider the cropping practices in different regions in the State and to suggest suitable cropping rotations providing for some fodder crops, leguminous and non-leguminous with a view to improving the fertility of soil and also increased milk production in the areas;

(7) To meet at least twice a year to review the programme of work for the main cropping seasons in the State;

(8) To integrate fodder production in the general Agricultural pattern by fixing proper forage grain rotation by allocating at least 10 per cent of the total cultivated areas for fodder production; and

(9) Any other relevant matter that may be referred to it by the State Government.

Sri S. LAZAR : Now that the Government realise the need for pasture lands for cattle, may I know whether there is any scheme for providing pasture lands in villages of deltaic areas where there is absolute need for pasture lands and if so, what are the steps that the Government propose to take to implement such a scheme?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, it is a difficult problem. So far as the deltaic areas are concerned, land is not easily available for this purpose as all the lands are wet lands. I have been suggesting to people in such areas like the Thanjavur district, that they might start growing grass in coconut and other gardens.

Sri T. IRUSAPPAN : கால்நடைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் என்று தெரியாமல் நிலமற்ற ஏழைகள் அந்த நிலங்களை பண்படுத்தி சாகுபடி செய்துவருகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் வந்தால் அவர்கள் வெளியேறவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகையால் அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்குமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து சபை கிராம பொதுமக்களின் நலனில் விசேஷ அக்கரையுள்ளவர்கள். அவர்கள் பார்த்துத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

Sri J. MATHA GOWDER : கிராமப் புறங்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களிலெல்லாம் காட்டிலாக்காவினர் அதிகமான செடிகளையும் மரங்களையும் நடுவதன் காரணமாக மேய்ச்சல் நிலங்கள் குறைந்திருக்கின்றன. அப்படிச் செய்யக்கூடாதென்று பஞ்சாயத்து யூனியனை கலந்தாலோசித்து நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் நீலகிரியைப்பற்றி சொல்கிறார்கள். நீலகிரியில் மரங்கள் நடுவதற்கு நிலங்கள் வேண்டியிருக்கிறது. மற்ற இடங்களிலும் வேண்டியிருக்கிறது. தொழில் வளர்ச்சிக்கும் முக்கியமாக வேண்டியிருக்

[7th March 1961

கிறது. அதற்கு முக்கியமாக வேண்டியிருக்கும்போது கொஞ்சம் எடுத்துக்கொண்டால் கனம் அங்கத்தினர் அவர்கள் ஆதரிக்கக் கூடாதா ?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Even though much has been done for the improvement of the cattle feed, are the Government aware of the fact that the fodder production is at present quite inadequate when compared to the cattle population and if so, will the Government consider the desirability of having one grass farm in each of the seed farms in areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I do not know if it is practicable to have one grass farm in each of the seed farms. Some of them are not having enough land even for seed production. But, if we take into account the present strength of the cattle, any amount of our efforts towards increasing the grazing facilities will not be adequate. Therefore, the numerical strength of cattle must be reduced and the quality of cattle must be upgraded. This is being done by the various schemes that we have undertaken.

SRI S. NAGARAJA MONEGAR : ஏற்கனவேயிருந்த மிட்டா காடுகளை சர்க்கார் எடுத்துக்கொள்கிறபோது சர்வே செய்து பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு ஏற்கனவேயிருந்த மேய்ச்சல் அனுகூலங்கள் சிலவற்றை செய்து கொடுப்பதாகக் கூறியது இப்பொழுது எந்த நிலையிலிருக்கிறது ? அது நடைபெற்று வருகிறதா ? இல்லையேல் துரிதமாக நடைபெறுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்போதைக்கப் போது சர்வே செய்யப்பட்டு சர்வே முடிந்த பிறகு எந்தளவு இந்த வசதிகள் கொடுக்கவேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

Subramania Swami Devasthanam (Tiruttani)

* 633 *Q*.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) when the Government propose to reconstitute the Board of Trustees for Subramania Swami Devasthanam, Tiruttani, Chingleput district; and

(*b*) the number of vacanies that have arisen in the Board due to efflux of time or expiration of period for which the trustees were appointed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal to reconstitue the Board of Trustees of the Devasthanam.

(*b*) Three. A trustee has been appointed for one post.

SRI K. VINAYAKAM : Is it not a fact that the present Board of Trustees except the one that has been appointed recently, was appointed by the Andhra Pradesh Government and a Member of the Legislative Assembly happens to be the Chairman of the Board